17.04.2026

O.S.No.274/2011

வா.சா.1.திரு.மல்காளை, த.பெ.திரு.பாண்டியன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. எனது தாயார் பிடாரியம்மாள் வாங்கிய கிரைய ஆவணத்தில் நான்குமாலில் எந்த இடத்திலாவது பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்று வா.சா.ஆ.1 ஆவணத்தை காண்பித்து கேட்டப்போது படிக்க இயலவில்லை என்று தெரிவிக்கிறார். போஸ் என்பவர் வீடு கட்டுவதற்கு முன்பாகவே பிரதிவாதி வீடு கட்டிவிட்டார் என்றால் கொட்டம் போட்டு இருந்தார் வீடு கட்டவில்லை. பிரதிவாதிக்கு புலங்குவதற்கு இடம் கொடுததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. உறவினர் என்ற அடிப்படையில் கொடுத்தேன்.

2. பிரதிவாதி எனது இடத்தை எந்த வருடம் ஆக்கரமித்தார் என்றால் ஞாபகமில்லை. எனது அண்ணன் போஸ் என்வருக்குதான் தெரியும். தாவா சொத்தை ஆக்கரமிப்பு செய்ததாக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் உண்மை தன்மை இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாவா சொத்தில் போஸ் என்பவருக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றாலும் வாதி எனது சகோதர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.